# கீழக்கரை நகர்மன்ற 27.09.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

கீழக்கரை நகராட்சியில் 2016–17 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை குறிப்பு பத்தி எண்.24–ல் இந்நகராட்சி மின் இணைப்பு கட்டண அட்டைகளில் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி என்ற பெயரில் பதிவு இல்லாமல் வெவ்வேறு அலுவலர் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அதனை மாற்றி ஆணையாளர், கீழக்கரை நகராட்சி என்ற பெயரில் மின் இணைப்புகளை மாற்றம் செய்யுபடி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஆணையாளர், கீழக்கரை நகராட்சி (Commissioner, Keelakarai Municipality) என்ற பெயரில் மின் இணைப்புகளை மாற்றம் செய்து தருமாறு கீழக்கரை, நகர்மின்சார வாரியம், உதவி மின்பொறியாளர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்காணும் இவ்வலுவலக கடிதத்திற்கு இந்நகராட்சி அலுவலகத்திற்குரிய மின் இணைப்புகள் பெயர் மாற்றம் செய்வதற்கு, ஒரு எண்ணம் மின் இணைப்பிற்கு தலா ரூ.200/– வீதம் மொத்தம் 46 எண்ணம் மின் இணைப்பிற்கு ரூ.9200/– கட்டணம் செலுத்துமாறு தெரிவித்து கீழக்கரை, நகர் / டான்ஜெட்கோ, உதவி மின்பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.உ.மி.பொ/கீழ/கோ/அ எண்.104/, நாள்.31.08.2019ன்படியானது இந்நகராட்சிக்கு 13.09.2019–ம் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 46 எண்ணம் மின் இணைப்புகளுக்கு பெயர் மாற்றம் செய்வதற்குரிய கட்டணம் ரூ.9200/– மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.319/2017/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

மின் இணைப்பு கட்டணம் ரூ.9200/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.616அனுமதிக்கப்பட்டது**

## பொருள் :2

கீழக்கரை நகராட்சி வார்டுஎண்.2, முத்துச்சாமிபுரம் கதவு எண்.167–ல் வசித்து வந்த இவ்வலுவலக துப்புரவு பணியாளர் திரு.எம். சித்திரவேலு, த/பெ. முனியாண்டி என்பவர் கடந்த 06.12.2018ம் தேதி பணியிடையே மரணமடைந்த பிறகு அவரது மனைவி திருமதி.சி.மாரியம்மாள் மற்றும் அவரது வளர்ப்பு மகள் கலைச்செல்வியும் வாரிசுதாரர்களாக இருப்பதாகவும் அவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளான கருணை அடிப்படையில் பணி நியமனம் மற்றும் பணப்பயன்கள் வழங்கக் கோரி 08.08.2019–ம் தேதி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு முகவரியிட்ட கடிதம், இந்நகராட்சிக்கு நகலிடப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக மனுதாரர் திருமதி.சி. மாரியம்மாள் க/பெ. சித்திரவேலு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 19.08.2019–ம் தேதி WP (MD)

No.18332/2019ன்படி தொடரப்பட்ட வழக்கின் மீது, மனுதாரர் திருமதி.சி. மாரியம்மாள் க/பெ. சித்திரவேலு என்பவரின் தகுதியின் அடிப்படையில் அவரது பிரதிநிதித்துவத்தை பரிசீலித்து முடிவு செய்யும் பொருட்டு மனுவை தள்ளுபடி செய்து மாண்புமிகு நீதியரசர்களால் 26.08.2019–ம் தேதி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்குரைஞர் திரு.ஏ. கண்ணன் அவர்களால் 16.09.2019–ம் தேதி கோரப்பட்டுள்ள வழக்குரைஞர் கட்டணம் ரூ.15,000/– மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.433/2019/சி1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

வழக்குரைஞர் கட்டணம் ரூ.15,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.617 அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் :3</u>**

**கீழக்கரை நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவிற்குத் தேவையான டெக்ஸ்டாப் கணினி–2 எண்ணம், டி.வி.டி. ரைட்டர் சிலிம்–2 எண்ணம், கலர் பிரிண்டர்–1 எண்ணம் மற்றும் லேசர் பிரிண்டர்–1 எண்ணம் சப்ளை செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.2,25,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு, 16.08.209–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கணினி, பிரிண்டர் மற்றும் அதன் உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு 17.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.**

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | <u>வருவாய் நிதி 2019–20</u> | | |
| 1. | இந்நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவிற்குத் தேவையான டெக்ஸ்டாப் கணினி–2 எண்ணம், டி.வி.டி. ரைட்டர் சிலிம்–2 எண்ணம், கலர் பிரிண்டர்–1 எண்ணம் மற்றும் லேசர் பிரிண்டர்–1 எண்ணம் சப்ளை செய்தல். | 2.50 | **Smak Tech Computers** 7/520-19 பாரதிநகர், 4–வது தெரு, இராமநாதபுரம் | மதிப்பீட்டு தொகைக்கு 0.35% குறைவு |
| | | | **E- Tech Computer** 67, வண்டிக்காரத் தெரு, இராமநாதபுரம் | மதிப்பீட்டு தொகைக்கு 1.25% அதிகம் |

<u>(கோப்பு எண். 703/2019/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Smak Tech Computers, இராமநாதபுரம் நிறுவனத்தின் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.618 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :4**

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் அமைந்துள்ள கூடுதல் கட்டிடத்தின் மேல்தளத்தில் பொறியாளருக்கு தனி அறை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, மேற்காணும் அறையில் அலுமினிய தடுப்புகள், வர்ணம் பூசும் பணி மற்றும் கூடுதல் வசதிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.2,25,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 30.07.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அலுமினிய தடுப்புகள், வர்ணம் பூசும் பணி மற்றும் கூடுதல் வசதிகள் செய்யும் பணிக்கு 19.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி 2019–2020 | | | | |
| 1. | இவ்வலுவலக வளாகத்தில் பின்புறம் அமைந்துள்ள கூடுதல் கட்டிடத்தின் மேல்தளத்தில் இந்நகராட்சி பொறியாளருக்கு தனி அறை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, மேற்காணும் அறையில் அலுமினிய தடுப்புகள், வர்ணம் பூசும் பணி மற்றும் கூடுதல் வசதிகள் செய்யும் பணி | 2.25 | M/s. ARTE என்டர்பிரைசஸ் 115, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை –600 058 | மதிப்பீட்டு தொகைக்கு 0.52% குறைவு |
| | | | திரு.எஸ்.எம். முனியசாமி ஒப்பந்ததாரர், எண்.1/4,மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 1.23% அதிகம் |

**(கோப்பு எண். 639 /2019/இ1)**

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.52% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ARTE என்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.619 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :5**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) அமைக்கப்பட்டு, இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி, உயர்மின் கோபுர விளக்குகள் எரியாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் புகார்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் 05.08.2019–

ந்தேதிய அறிவுரையின்படி உயர்மின் கோபுர மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து மேற்படி உயர்மின் கோபுர விளக்குகளை நல்ல முறையில் எரிய வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,85,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 16.08.2019–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உயர்மின் கோபுர மின்விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 19.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | <u>வருவாய் நிதி 2019–20</u> | | |
| 1. | இந்நகராட்சிக்குட்ட வார்டு எண்.2 புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுரவிளக்குகள் (High Mast Light) பழுதுநீக்கம் செய்யும் பணிகள். | 2.85 | **M/s. ARTE** என்டர்பிரைசஸ் 115, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை –600 058 | மதிப்பீட்டு தொகைக்கு 0.38% குறைவு |
| | | | திரு.எஸ்.எம். முனியசாமி ஒப்பந்ததாரர், எண்.1/4,மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 1.27% அதிகம் |

<u>(கோப்பு எண். 702 /2019/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ARTE என்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## <u>தீர்மானம் எண்.620 அனுமதிக்கப்பட்டது</u>

## <u>பொருள் :6</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கிழக்குத் தெரு ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி, உயர்மின் கோபுர விளக்குகள் எரியாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் புகார்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் 05.08.2019–ந்தேதிய அறிவுரையின்படி உயர்மின் கோபுர மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து மேற்படி உயர்மின் கோபுர விளக்குகளை நல்ல முறையில் எரிய வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,55,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 16.08.2019–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உயர்மின் கோபுர மின்விளக்குகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 19.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2019–20 | | |
| 1. | இந்நகராட்சிக்குட்ட வார்டு எண்.5 கிழக்குத் தெரு ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் அமைக்கப் பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) பழுதுநீக்கம் செய்யும் பணிகள். | 1.55 | M/s. ARTE என்டர்பிரைசஸ் 115, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை –600 058 | மதிப்பீட்டு தொகைக்கு 0.35% குறைவு |
| | | | திரு.எஸ்.எம். முனியசாமி ஒப்பந்ததாரர், எண்.1/4,மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 1.21% அதிகம் |

(கோப்பு எண். 702 /2019/இ1)
அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ARTE என்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.621அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அண்ணா நகர், முத்துச்சாமிபுரம் மற்றும் வார்டு எண்.9 பணியக்காரத் தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக 6'' பி.வி.சி. குழாய் அமைத்து கழிவுநீரை வெளியேற்றும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.4,80,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 30.07.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் இடங்களில் கழிவுநீரை வெளியேற்ற புதிதாக 6'' பி.வி.சி. குழாய்கள் அமைக்கும் பணிக்கு 19.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2019–20 | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அண்ணா நகர், முத்துச்சாமிபுரம் மற்றும் வார்டு எண்.9 பணியக்காரத் தெரு | 4.80 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ. 4,75,415/– 0.62% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகிய பகுதிகளில் புதிதாக 6” பி.வி.சி. கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.4,84,049/– 1.19% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண். 554/2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

**மதிப்பீட்டு தொகையை விட 0.62% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.**

**தீர்மானம் எண்.622அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :8**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கில் 2016–17 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் 2018-19 & 2019–2020 ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) மனித கழிவுகளை உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. திட்டப்பணிகள் அனைத்தும் நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக உரக்கிடங்கிற்கு புதிதாக மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து உயர்மின் அழுத்த மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு புதிதாக 100KVA மின்மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அதற்கு முதற்கட்டமாக LT- CT Box மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பொருத்தும் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ. 7,50,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினத்தை மேற்காணும் திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் திட்ட மானியத்திலிருந்து ஈடு செய்யும் பொருட்டு 30.07.2019–ந்தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் மின்சார வசதி செய்ய LT- CT Box மற்றும் இதர மின் சாதனப்பொருட்கள் பொருட்கள் பொருத்தும் பணிக்கு 19.09.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019–20** | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட புதிய உரக்கிடங்கிற்கு, புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து மும்முனை உயர்மின் அழுத்த மின் இணைப்பு (3 phase) பெறுவதற்கு முதல் கட்டமாக LT- CT Box மற்றும் இதர மின் சாதனப்பொருட்கள் பொருட்கள் | 7.50 | M/s. தர்ஷினி அசோசியேட் 33/28, சம்பந்த மூர்த்தி தெரு, மதுரை–01 | ரூ. 6,50,169/– 0.03% மதிப்பீட்டு தொகையை விட குறைவு |
| | | | M/s. அக்சயாசஹாச் எலக்ட்ரோ கன்ரோல்ஸ், 26, GR ரெஸ்ட் | ரூ.6,63,970/– 2.09% மதிப்பீட்டு தொகையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருத்தும் பணிகள். | | ஹவுஸ், 48, கோபால கொந்தன் தெரு, மதுரை–01 | விட கூடுதல் |

**<u>(கோப்பு எண். 409/2019/இ1)</u>**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. தர்ஷினி அசோசியேட், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.623அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் :9</u>**

கீழக்கரை நகராட்சியில் திரு. எஸ். சங்கிலிமாடன் என்பவர் கதவு எண். 31D, 7வது தெரு மேற்கு, அண்ணாநகர், தூவிபுரம், தூத்துக்குடி–628008 என்ற முகவரியில் உள்ள ஹரிஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தை இந்நகராட்சியில் ஒப்பந்தகாரராக பதிவு செய்ய வேண்டி கொடுத்துள்ள விண்ணப்பம் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஹரிஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்தை இந்நகராட்சி ஐந்தாம் வகுப்பு ஒப்பந்தகாரராக பதிவு செய்வதற்கு மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 770/2019/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.624அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் :10</u>**

**மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் 29.08.2019 அன்று மதுரையில், மதுரை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து திட்டப்பணிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அனைத்து வீடுகள் மற்றும் அலுவலகங்கள், நகராட்சிக்கு சொந்தமான திறந்த வெளி கிணறுகள் மற்றும் மேல்நிலை தொட்டிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க கோரி வலியுறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வு கூட்டம் 05.09.2019 அன்று மதுரையில் நடைபெற்றதில் முக்கியமாக 30.09.2019–க்குள் அனைத்து நகராட்சிக்குட்பட்ட தனிநபர் குடியிருப்புகள், நகராட்சிக்குட்பட்ட கட்டிடங்கள் அனைத்து நீர் ஏற்ற நிலையங்கள், மேல்நிலை தொட்டிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்ட வேண்டும் என வலியுறுத்தலின் பேரில் நகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள், மழைநீர் தேங்கும் இடங்கள், நீர் ஏற்ற நிலையங்கள், மேல்நிலை தொட்டி அமைந்துள்ள இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே மேற்காணும் இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.3,90,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.**

**(கோப்பு எண்.820/2019/இ1)**

அலுவலக குறிப்பு

1. பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.3,90,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.625அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :11**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2019—20ன் கீழ் ரூ.200.00 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து 19.08.2019—ம் தேதிக்குள் கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 16.08.2019—ம் தேதிய **RDMA Group Whats App.** செய்தி மற்றும் தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 16.08.2019—ம் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெற்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு வழிமுறையாக கருத்துரு அனுப்பப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி 14—வது வார்டு மாதிஹூர் ரசூல் சாலை முதல் மாலாங்குண்டு வரை மற்றும் இந்நகராட்சி பள்ளமோர்க்குளம் புதிய உரக்கிடங்கிற்கு கிழக்கு கடற்கரை சாலை இணைப்பிலிருந்து தார்ச்சாலை அமைக்கும் பணிகள் | 2.700 | 200.00 |

மேற்காணும் விபரப்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு, 18.07.2019 அன்று அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2019—20க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் இந்நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில், **(TURIP: 0.70+ SFC / CFC/Land Regularisation Fund : 0.90 + ULB: 0.40 lakhs)** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு, இந்நகர்மன்ற தீர்மானம் இயற்றி அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அனுப்பி வைக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்.03.09.2019—ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 455/2019/இ1)

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சிப் பகுதிகளில் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு **(TURIP: 0.70+ SFC / CFC/Land Regularisation Fund : 0.90 +**

ULB: 0.40 lakhs) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்காணும் திட்டத்திற்குரிய இந்நகராட்சி பங்கு 20 சதவிகிதம் ரூ.40 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.626அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :12**

எதிர்வரும் வட கிழக்கு பருவ மழைக்காக முன் எச்சரிக்கை நடவடிக்கை – கீழக்கரை நகராட்சியின் பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான தளவாடப்பொருட்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் சுகாதார நலனை கருதி பாதுகாப்பு உபகரணம் வாங்கி இருப்பில் வைத்துக்கொண்டு உரிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட தளவாட பொருட்கள் வாங்கி வழங்கிடும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.4,00,000/– ஆகும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | தேவையான தளவாடப்பொருட்கள் / பாதுகாப்பு உபகரணம் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மண்வெட்டி இரும்பு பிடியுடன் | 30 |
| 2 | சாக்கடை கரண்டி | 30 |
| 3 | புள்ளுவாரி (5 பல்லுடன்) | 30 |
| 4 | கடப்பாறை | 6 |
| 5 | கூட்டுமாறு (பெரியது) | 60 |
| 6 | சட்டி | 60 |
| 7 | பெருக்குமாறு | 100 |
| 8 | பிரஸ்கட்டை பிடியுடன் | 50 |
| 9 | கைத்தட்டு | 60 |
| 10 | சாந்து சட்டி | 20 |
| 11 | வாளி இரும்பு (சிறியது) | 10 |
| 12 | அரிவாள் | 15 |
| 13 | மழைக்கோட் | 50 |

மேற்காணும் பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான தளவாடப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணம் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/–யை இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார நலன் கருதி தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணம் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொருட்கள் வாங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.627அனுமதிக்கப்பட்டது**

## பொருள் :13

தூய்மை இந்தியா இயக்கம் (Swachh Bharat Scheme)-திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 (Solid Waste Management Scheme)–ன் கீழ் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணி (Construction of Micro Compost Centre) நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கிற்கு மும்முனை இணைப்பு (3 phase) பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது (மின் இணைப்பு எண்.303–001–2361). இந்த 15KW மின் இணைப்புக்குரிய கூடுதல் டெபாசிட் கட்டணம் ரூ.8,800/– செலுத்த கோரி கீழக்கரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உதவி மின்பொறியாளர் அவர்களிடமிருந்து 06.09.2019–ம் தேதி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்படி பட்டியல் ரூ.8,800/– மட்டும் கீழக்கரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உதவி மின்பொறியாளர் அவர்களுக்கு செலுத்துவதற்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கிற்கு 15KW மும்முனை இணைப்புக்குரிய (3 phase) கூடுதல் டெபாசிட் கட்டணம் ரூ.8,800/–ஐ உதவி மின்பொறியாளர் கீழக்கரை அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

### தீர்மானம் எண்.628 அனுமதிக்கப்பட்டது

## பொருள் :14

இந்நகராட்சிக்கு உரக்கிடங்கில் தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2016–17 ம் ஆண்டு திட்டத்தின் கீழ், குப்பைகளை பிரித்தெடுக்க 1/3rd Roof Shed அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஓய்வு அறை, தெருவிளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று முடிவுற்ற நிலையில் உள்ளது. அதனை தொடர்ந்து ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 & 2019–2020 கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) மேலும் மனித கழிவுகளை உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணிகள் அனைத்தும் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மின்சார வசதிகள் ஏதும் இல்லை. ஆகையால் அனைத்து திட்டப்பணிகளையும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்குட்பட்ட புதிய உரக்கிடங்கிற்கு புதிய மின்கம்பம் மற்றும் 80KVA புதிய மின்மாற்றி அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) வழங்குவதற்கு விண்ணப்பம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து இராமநாதபுரம் உதவி மின்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் 28.06.2019–ந் தேதிய கேட்பின்படி ரூ.6,2,59/– விண்ணப்ப கட்டணம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட புதிய உரக்கிடங்கில் புதிய மின்கம்பம் மற்றும் 80KVA புதிய மின்மாற்றி அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) வழங்குவதற்குரிய மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.3,26,490/–ஐ இராமநாதபுரம், உதவி மின்பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்துமாறு 26.09.2019–ம் தேதி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்படி பட்டியல் தொகை ரூ.3,26,490/—ஐ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்துவதற்கு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 837/2016/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சிக்குட்பட்ட புதிய உரக்கிடங்கிற்கு புதிய மின்கம்பம் மற்றும் 80KVA புதிய மின்மாற்றி அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) வழங்குவதற்குரிய மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.3,26,490/—ஐ செலுத்துவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினத்தை மேற்காணும் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் திட்ட நிதியில் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.629 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் :15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 16 மற்றும் 21 ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ள கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனில் புதிதாக கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் பம்ப் (Motors & Pump) வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள 2019—2020—ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட விலைவிகித பட்டியலின்படி (Schedule of Rate) மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலைவிகித பட்டியலில் (Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப் படாததால் மேற்கண்ட பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு ஏதுவாக உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 10.09.2019—ந் தேதி இவ்வலுவலக பொறியாளர்களால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரப்படியான கழிவுநீர் மின்மோட்டார்கள் மற்றும் பம்ப் (Motors & Pump) புதிதாக விநியோகம் செய்யும் பணிக்கு GST சேர்த்து 19.09.2019—ந் தேதி கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | **Jai Sree Ram Electrical Engineering Works, Madurai** | **Sri Shanmuga Electrical Engineering Works, Tuticorin** |
| 1 | Supplying and Fixing of SP4L 4" x4" Self Priming Mual Pump coupled with Krisilokar 10 HP 9 KW 1500 RPM Motor mounted on a common base frame of coupling etc., complete. | 1 No (Each) | 88500 | 91000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Supplying and Fixing of SP4L 3" x3" Self Priming Mual Pump coupled with Krisilokar 5 HP 3.7KW 1500 RPM Motor mounted on a common base frame of coupling etc., complete. | 1 No (Each) | 40700 | 42700 |
| 3 | GST 18% of | | 23256 | 24066 |
| **Total** | | | **152456** | **157766** |

(கோப்பு எண்.771/2019/இ1)

<u>அலுவலக குறிப்பு:-</u>

கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் பம்ப் (5HP, 10HP) ஒரு எண்ணம் விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.1,52,456/—க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **Jai Sree Ram Electrical Engineering Works, Madurai** விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.630 அனுமதிக்கப்பட்டது</u>**

**ஓம்/—ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**